

திருச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு காஜாமலை பகுதியில் உள்ள காதர் மொய்தீன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்ற கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், காதர் மொய்தீன் அவர்களுக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வில் மாநகர மேயர் அன்பழகன், மாவட்டப் பொருளாளர் துரைராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் காதர் மொய்தீன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

### அரசு ஊழியர்களின் 22 ஆண்டுக் கால கோரிக்கையை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒரு துளி மையால் நிறைவேற்றி சாதனை!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

சென்னை, ஜன. 7-

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுக் கால கோரிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் பேனாவின் ஒரு துளிமையால் கையெழுத்திட்ட நிறைவேற்றி விட்டார் என தினத்தந்தி நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது. அது வருமாறு:-



தலையங்கம்
தினத்தந்தி
6.1.2026 (செவ்வாய்க்கிழமை)
22 ஆண்டுகால கோரிக்கை
ஒரு துளி மையில் நிறைவேறியது!

2026-ம் ஆண்டு பிறந்ததில் இருந்தே நாள்தோறும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் அறிவிப்புகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு வருகிறார். 3-ந்தேதி அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம், 4-ந்தேதி பொங்கல் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம், நேற்று 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடக்கம். அடுத்த மாதம் தேர்தல் தேதி வெளியாகும் முன்பு இன்னும் பல திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு வரை பழைய ஓய்வூதிய திட்டம்தான் அமலில் இருந்தது. நிதிச்சுமையை

2026ம் ஆண்டு பிறந்ததில் இருந்தே நாள்தோறும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் அறிவிப்புகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு வருகிறார். 3ந்தேதி அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம், 4ந்தேதி பொங்கல் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம், நேற்று 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடக்கம். அடுத்த மாதம் தேர்தல் தேதி வெளியாகும் முன்பு இன்னும் பல திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு வரை பழைய ஓய்வூதிய திட்டம்தான் அமலில் இருந்தது. நிதிச்சுமையை தவிர்க்க பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை மத்திய அரசு அமலுக்கு கொண்டு வந்ததால், அப்போதைய முதல் அமைச்சரான ஜெயலலிதா அதை தமிழக அரசு ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்தினார்.

இதன்படி அரசு ஊழியர்கள் மாதந்தோறும் தங்கள் அடிப்படை ஊதியத்தில் 10 சதவீதம் பங்களிப்பு செய்யவேண்டும், அரசும் 18.5 சதவீதத்தை தனது பங்காக செலுத்தும். இந்த தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அதில் கிடைக்கும் லாபத்தொகை அரசு ஊழியர்களின் கணக்கில் சேர்ந்துகொண்டே இருக்கும். ஓய்வுபெறும் போது அந்த கணக்கில் சேர்ந்திருக்கும் தொகையில் 60 சதவீதம் ரொக்கமாகவும், மீதம் உள்ள 40 சதவீதத்தில் கிடைக்கும் வட்டித்தொகை ஓய்வூதியமாகவும் வழங்கப்படும். இந்தநிலையில், 2021 சட்டமன்றத் தேர்தலின்போது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக கூறியிருந்ததை நிறைவேற்றுவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையிலான குழு அமைக்கப்பட்டது.

அந்த குழு வழங்கிய பரிந்துரைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழுமையாக ஆராய்ந்து உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்தார். இதன்படி, அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது அவர்கள் வாங்கிய கடைசி மாத அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 50 சதவீதம் ஓய்வூதியமாக கிடைக்கும். ஓய்வூதியர் இறந்துவிட்டால் அதில் 60 சதவீதம் அவர்களின் வாரிசுக்கு வழங்கப்படும். பென்ஷன் திட்டத்தின் பலனை அடைவதற்காக அரசு ஊழியர்களும் தங்கள் மாத சம்பளத்தில் 10 சதவீதத்தை பங்களிப்பாக வழங்க வேண்டும். அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால கோரிக்கையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் பேனாவின் ஒரு துளி மையால் கையெழுத்திட்டு நிறைவேற்றிவிட்டார் என அரசு ஊழியர்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடிவருகிறார்கள். ஏற்கனவே கடும் நிதிச்சுமையால் தத்தளிக்கும் தமிழக அரசு இந்த சுமையையும் கூடுதலாக எப்படி சமாளிக்கப்போகிறது? என்று அரசு வட்டாரங்களில் விசாரித்தபோது, அரசு மேற்கொள்ளப்போகும் பல சீர்திருத்தங்கள் மூலம் இதற்காக நிதி திரட்டமுடியும்.

எடுத்துக்காட்டாக இப்போது தமிழ்நாட்டு பொருளாதாரத்தில் சேவைகள் அளிக்கும் பங்களிப்பு விகிதாசாரத்துக்கு இணையாக வரியில் இல்லை. எனவே இன்னும் வரி வளையத்துக்குள் வராத பல சேவைகளை கொண்டு வர திட்டம் இருக்கிறது என்றனர். அப்படி புதிதாக சேவைகளுக்கு வரி விதிக்கப்படும்பட்சத்தில் அந்த சுமை மக்கள் மீதுதான் விழும். மேலும் இனி அரசின் வரி வருவாயில் 22 சதவீதம் ஊழியர்களின் பென்ஷனுக்காக செலவாகிவிடும். எனவே கவனமான திட்டமிடுதலும் தேவை என்று முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் கூறியிருப்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். மொத்தத்தில் கூட்டவேண்டியதை கூட்டி, கழிக்கவேண்டியதை கழித்து, பெருக்கவேண்டியதை பெருக்கி, வகுக்க வேண்டியதை வகுத்து அரசுக்குத் தேவையான நிதியை திரட்டி விடுவோம் என உறுதிபட கூறுகிறார் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உதயச்சந்திரன்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏ.ஐ. தொழில்நுட்ப உலகில் எளிதில் போட்டிபோடுவோம் கனவு நிஜமாகியது!

## மடிக்கணினி பெற்ற மாணவ – மாணவிகள் நெகிழ்ச்சி!

சென்னை, ஜன. 7-

மடிக்கணினி வாங்க வேண்டும் என்ற எங்களது கனவு நிஜமாக மாறியுள்ளதாகவும், ஏ.ஐ. தொழில்நுட்ப உலகில் எளிதில் போட்டியிட மிகவும் பயனளிக்கும் என்றும்மாணவ, மாணவிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் மடிக்கணினி திட்டம் மூலம் பயன் அடைந்த மாணவர்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

**முதல்வரின் கையால் மடிக்கணினி பெற்றது மகிழ்ச்சி!**

**ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி 4ம் ஆண்டு மாணவி பவித்ரா:**

நான் 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் மருத்துவம் படித்து வருகிறேன். அப்பாகூலிவேலை செய்து வருகிறார். ஒரு சாதாரண செல்போன் கூட வாங்க முடியாத நிலையில் தான் இருக்கிறேன். மடிக்கணினி என்பது எனக்கு ஒரு கனவாக மட்டுமே இருந்தது. நான் வேலைக்கு சென்று, அதில் வரும் சம்பளம் மூலம் மடிக்கணினி வாங்க திட்டமிட்டிருந்தேன்.

ஆனால், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கையால் வாங்கியது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மருத்துவ மாணவர்களுக்கு மடிக்கணினி மிகவும் முக்கியமான ஒன்று.

**படிப்பு - வேலை வாய்ப்புக்கு மிகவும் உதவும்!**

**வியாசர்பாடி அம்பேத்கர் அரசு கலை கல்லூரி 3ம் ஆண்டு மாணவர் ஆரோக்கிய டெனிதாஸ்:**

தற்போதைய காலக்கட்டத்தில் ஏ.ஐ. இல்லாமல் எதுவும் இல்லை. அரசின் மடிக்கணினியில் ஏ.ஐ. தொழில் நுட்பத்தை கற்றுக் கொண்டு, அதில் தலைசிறந்த மாணவர்களாகவர முடியும். பொழுதுபோக்கிற்கு மட்டும் பயன்படுத்தாமல் படிப்பு, வேலை வாய்ப்பு போன்ற நமது வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும்.

**ஆனந்தத்தில் உள்ளேன்!**

**தரமணி டாக்டர் தர்மாம்பாள் அரசு பாலி டெக்னிக் கல்லூரி மாணவி காயத்ரி:**

பொருளாதாரத்தில் பின்தங்கிய எனது குடும்ப சூழ் நிலையால் என்னால் மடிக்கணினி வாங்க முடியவில்லை. ஆனால், இப்போது தமிழக அரசு எனக்கு இலவசமாக வழங்கியிருக்கிறது. சொல்ல முடியாத ஆனந்தத்தில் உள்ளேன். மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் வழங்கிய தமிழக அரசுக்கும், முதல்அமைச்சருக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

**எனது பெற்றோரின் இடத்தில் முதல்வர்!**

**அண்ணா பல்கலைக்கழக மாணவி ஆர்த்தீஸ்வரி:**

தற்போதைய தலைமுறை ஏ.ஐ. தொழில்நுட்பத்தை நோக்கிச் சென்று கொண் டிருப்பதால் செல்போனை வைத்து மட்டுமே அனைத்தையும் செய்து முடிக்க முடியாது. அடுத்தக்கட்டமாகவேலைதேடுவதற்கு மடிக்கணினி மிகவும் உதவியாக இருக்கும். அரசு கல்லூரியில் படிக்கும் பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர் கூலி வேலை செய்பவர்களாக இருப்பார்கள். அவர்களால் மடிக்கணினி வாங்கி கொடுக்க முடியாது. பெற்றோரின் இடத்தில் இருந்து முதல்அமைச்சர் எங்களுக்கு இலவசமாக மடிக்கணினி கொடுத்துள்ளார். முதல்அமைச்சருக்கு மிக்க நன்றி. கனவாக இருந்ததை நிஜமாக மாற்றியுள்ளார்.

**எனது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்!**

**ராணி மேரி கல்லூரி மாணவி சுவாதி:**

அடுத்ததாக நான் சட்டம் பயில விரும்புகிறேன். அப்போது, ஏராளமான தகவல்களை வலைதளத்தில் தேடிப்படிக்க வேண்டும். இதற்கு இந்த மடிக்கணினி மிகவும் உறுதுணையாக இருக்கும். வெளியில் வாங்க வேண்டும் என்றால் ரூ.50 ஆயிரம் செலவாகும். ஆனால், அரசு எங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. இது எனது, முன்னேற்றத்திற்னுடைய வாழ்வாதாரமாக மிகவும் உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தனர்.

சென்னையில் நடந்த மடிக்கணினி வழங்கும் விழாவில், துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

**தமிழ்நாட்டை உயர்த்தும் ‘திராவிட மாடல்’ அரசு!**

திராவிட இயக்கத்தை பொறுத்தவரைக்கும் அது எப்போதுமே ஒரு அறிவு இயக்கம். அறிவியலை கொண்டாடுகின்ற ஒரு இயக்கம். பெரியார், தொலைநோக்கு பார்வையோடு அன்றைக்குசொன்னது எல்லாம், இன்றைக்கு / அறிவியல் கண்டுபிடிப்புகளாக நம்முடைய கைகளில் இருந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய கைகளுக்கு இன்றைக்கு முதல்அமைச்சர் மடிக்கணினி கொடுத்திருக்கிறார். இதற்கு பேர்தான் வளர்ச்சி, இதற்கு பேர்தான் முன்னேற்றம். சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், இதற்கு பேர் தான் திரா விட மாடல். தமிழ்நாட்டை உயர்த்திய மாடல்.

இந்த திராவிட மாடல் தொடர மாணவர் கள் உங்களுடைய அன்பும் ஆதரவும் மிக, மிக முக்கியம். உங்களுக்காக இன்னும் ஏராளமான திட்டங்களை தருவதற்கு நம்முடைய முதல்அமைச்சர் தயாராக இருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.

### திருச்சி மாவட்டம்

# திருவெறும்பூர் தொகுதியில் வாக்காளர் சேர்ப்பு முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

திருச்சி, ஜன. 7-

திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி மாநகராட்சிக்கு உட்பட்ட திருவெறும்பூர் பகுதி முக்குலத்தோர் பள்ளி வார்டு எண் 41, 41அ பாக எண் 47,48,49,50,51, 52,53,54 காட்டூர் பகுதி லோமினால் பள்ளி வார்டு எண் 43 பாக எண் 85, 86, பொன்மலைப் பகுதி வார்டு எண் 46 பாக எண் 64,65, அரியமங்கலம் பகுதி செந்தனியபுரம் தொடக்கப்பள்ளி,

வார்டு எண் 35 பாகஎண் 151, 155, 156, 157, 158, 159, வார்டு எண் 34அ, பாகஎண் 147 149 150 வார்டு எண் 49அ பாகஎண்148 பூத்துகளில் நடைபெற்று வரும் வாக்காளர் சேர்ப்பு முகாமினை ஆய்வு செய்த அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நடைபெற்று வரும் வாக்காளர் பெயர் சேர்ப்பு முகாம்களில் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்க்க படிவம்,

மேலும் விடுபட்ட வாக்காளர்களை உரிய ஆவணங்கள் கொண்டு வாக்காளர் பெயர் சேர்க்கும் படிவம் 6 பூர்த்தி செய்து உரிய பி.எல்.ஓ.க்களிடம் வழங்குகின்ற பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை பூத்தில் உள்ள பி.எல்.ஏ.க்கள், மற்றும் பி.எல்.ஏ 2 களிடம் கேட்டு ஆய்வு செய்தார் .

இந்நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீல மேகம், தர்மராஜ், ராஜ் முகம்மது, விஜய குமார், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் உடன் இருந்தனர்.

### இங்கிலாந்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினால் பென்னி குயிக் சிலை அமைந்துள்ள

# கேம்பர்லீ நகரை மதுரையோடு இணைக்கும் கலாச்சாரத் திட்டம்!

## ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் லண்டன் செந்தில்குமார் தகவல்!

லண்டன், ஜன. 7 -

இங்கிலாந்தில் தமிழக முதல்வரால் பென்னி குயிக் சிலை அமைந்துள்ள கேம்பர்லீமதுரை நகரங்களை கலாச்சார இணைப்புத் திட்டத்தில் சேர்க்க ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ் சங்கங்களின் ஃபெப்டா யூ .கே சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதன் தலைவர் லண்டன் செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முல்லை பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக்கு நன்றிக்கடனாக, கலாச்சார இணைப்புத் திட்டத்தில் கேம்பரிலீ - மதுரை நகரங்களைக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் பொங்கல் திருநாளில் கையெழுத்தாக உள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர் பொறியாளர் ஜான் பென்னி குயிக். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த அணையை அவர் கட்டி முடித்தார்.

அவரது நினைவைப் போற்றும் வகையில் தேனி மாவட்டம் கூடலூரில் பென்னி குயிக் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. மேலும், அவர் பிறந்த கேம்பரிலீ நகரத்தில் தமிழகம் அரசு சார்பில் சிலையும் அமைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கலாச்சார இணைப்புத் திட்டத்தின் மூலம் மதுரை மற்றும் கேம்பரிலீ நகரங்களை கொண்டு வரத் தமிழக அரசு முடிவு செய்தது. இது தொடர்பாக கடந்த செப்டம்பர் 9 தேதி செய்தி வெளியிடப்பட்டது. அந்த வகையில் இது நகரங்களுக்கும் இடையேயான கலாச்சார இணைப்பு ஒப்பந்தம் பொங்கல் திருநாளில் மதுரையில் கையெழுத்தாக இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஃபெப்டா யூ.கே தலைவர் லண்டன் செந்தில் குமார் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஒப்பந்தம் இரு நகரங்களுக்கு இடையே வரலாற்று ரீதியான தொடர்பைப் புதுப்பிப்பதுடன் எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திடும். குறிப்பாக கலாச்சார பரிமாற்றம், தொழில் முதலீடுகள், கல்வி போன்ற அம்சங்களை மேம்படுத்தும். கடந்த வருடம் மே மாதம் அயலகத் துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி நாசர் லண்டன் வந்து இருந்தபோது கேம்பர்லீ-மதுரை இணைக்கும் திட்டத்தினைத் தெரிவித்தனர்.

அமைச்சர் சா.மு.நாசர், முதலமைச்சர் அவர்களுக்கும் துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். முதல்வர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேலும், அதன்படி சர்ரே மாகாணத்தின் மேயர் லூயிஸ் ஆஷ்பெரி ,கேம்பர்லீ தமிழ் சங்க செயலாளர் சந்தான பீர் ஒலி மற்றும் ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ் சங்க தலைவர் லண்டன் செந்தில் குமார் தலைமையிலான குழு தமிழகத்திற்கு ஜன.11ம் தேதி வருகைத் தரவுள்ளனர். அன்றைய தினம் முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னையில் சந்தித்து ஒப்பந்தம் குறித்து கலந்துரையாட உள்ளனர்.

அதன்பின் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களுக்குச் சென்று ஜன.14ஆம் தேதி பொங்கல் விழாக்களில் பங்கேற்க உள்ளனர். அவ்விழாவில் ஜல்லிக்கட்டு போட்டிகளையும் அவர்கள் பார்வையிடுகின்றனர்.

இறுதியாக இரு நகரங்களின் ஆணையர்களும் ஜன.16ம் தேதி கலாச்சார இணைப்புத் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளனர். பென்னி குயிக் என்ற மாமனிதருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக இது அமையும்.

என்று அவர் கூறினார்.

கடந்த வருடம் மே மாதம் அயலகத் தமிழர் நலத் துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி நாசர் லண்டன் வந்து இருந்த போது சர் பென்னி குயிக் சமாதி அமைந்துள்ள தேவாலத்திற்கு வருகை தந்தார், அப்போது கேம்பர்லீமதுரை இணைக்கும் திட்டத்தினைத் தெரிவித்தனர்.

அமைச்சர் சா.மு.நாசர், முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் அவர்களுக்கும் துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் இதில் உள்ள சாத்திய கூறுகளை அறிந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 49வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

**49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**